நாள்: 13.02.2026
OS 65/2016
பெயர் தினேஷ்குமார்
வா.சா.1
<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1991ம் ஆண்டு என் தந்தைக்கு பாகமாக கிடைத்த சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையயில் கருப்பையா என்ற நபருக்கு என் தந்தை விற்பனை செய்துள்ளார் என வாதுரையில் சொல்லியபின்னர் நகல் எடுத்துப்பார்த்தேனா என்றால் இல்லை. சின்னமனூர் சார் பதிவாளர் எண். 841/2004 ன் படி கருப்பையாவிற்கு கிரையம் கொடுத்த சொத்தை இந்த வழககில் கட்சி சேர்க்காததல் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. கருப்பையாவுக்கு என் தந்தை தான் கிரையம் எழுதிக்கொடுததுள்ளார். அதில் உள்ள கையெழுத்து என் தந்தை உடையது தான். அதில் என்னையும், என் தங்கைகையையும் கார்டியனாக காட்டி தான் கிரையம் முடித்துள்ளார். அது என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகல் தான் அது பி.வா.சா.ஆ.2 ஆகும்.

என் தந்தைக்கும், சந்திரசேகருக்கும், 3ம் பிரதிவாதி என் பெரியப்பா தான செட்டில் மெண்ட் ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான். அது பி.வா.சா.ஆ.3 ஆகும். 5ம் லக்க சொத்தை பொறுத்து என் தந்தைக்கும் சந்திரசேகருக்கும் பாக பிரிவினை நடைபெற்றது. அது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது பி.வா.சா.ஆ.4 ஆகும். வழக்குரை சொத்தை 9ம் பிரதிவாதிக்கு விற்ற பணத்தில் கடன் கொடுத்தது போக மீதிப்பணத்தை கொண்டு 2ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்ற விவரம் கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றும், நான் அதை தெரிந்துகொண்டே தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கின் பொருண்மைகளையும் மறைத்து, ஆவணங்களையும் மறைத்து, கடன் பொறுப்புகளையும் மறைத்து சொத்து விவரங்களையும் மறைத்து தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்).M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்